VISIT…

வைத்திருக்கிறாரே. அப்படியானால் பணம் இல்லாததால் தராமல் இருக்கவில்லை என்றல்லவா ஆகிறது. என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

''தப்பு நம்மிடம்தான் அப்பா, அதாவது நம் ஆளிடம் வசூலுக்கு நாம் அனுப்புவோமே ராமலிங்கம், அவர் கொஞ்சம் பணம் லஞ்சம் வாங்கிக் கொண்டு நம் பணத்தைப் பற்றிப் பேச்செடுப்பதே இல்லை. அதுதான், அவர் செல்லும் இடத்தில் எல்லாம் பாக்கி சேர்ந்து கொண்டே இருந்திருக்கிறது. முதலில் அவரை விரட்ட வேண்டும்.''

தந்தையும் மகனுமாகத் தொழில் பற்றிப் பேசியது எதுவுமே மயூரியின் மனதில் படவில்லை. மனுபரதன், பாக்கிப் பண வசூலுக்காக மட்டும்தான் போனான். பணத்தை மட்டுமே வசூலித்துக் கொண்டு வந்திருக்கிறான். பழைய தப்பை அவன் மறுபடி செய்யவில்லை.

எல்லையற்ற ஆறுதலில் 'அப்பாடி' என்று உடல் சோர்ந்த போதுதான் தன் மனம் எவ்வளவோ அலைபாய்ந்திருக்கிறது என்பது அவளுக்கே புரிந்தது.

இவ்வளவு தவிப்பானேன்?

பிறக்கப் போகும் குழந்தைக்கு ஒரு மோசமான முன் உதாரணமாக அமைந்து விடுவானோ என்ற கவலையா? அல்லது இன்னொரு பெண்ணை அவன் தொடுவதைச் சகிக்க முடியவில்லையா?

எண்ணும்போதே திக்கென்றது மயூரிக்கு.

இல்லையில்லை, அப்படி ஒன்றும் இராது.

அவள் என்ன காதல் மனைவியா? அல்லது அவன்தான் காதல் கணவனா?

இந்தக் குழந்தைக்காகத் திருமணம் செய்து கொண்டவர்கள்.

அவன் தவறாக நடந்தால், அது குழந்தையைப் பாதிக்கும். அதுதான் அவளது கவலையும்.

யாரோ கையைத் தொடுவது போல இருந்தது.

கண் விழித்துப் பார்க்கும் முன்னரே அது மனுபரதன்தான் என்பது புரிந்தது. கண்ணைத் திறந்து 'என்ன?' என்று வினவினாள்.

''உடம்புக்கு ஏதேனும் பண்ணுகிறதா? சோர்வாய்த் தெரிகிறாயே?'' என்று சிறு கவலையுடன் கேட்டான் மனுபரதன்.

அவன் கரிசனமாகக் கேட்டது இதமாக இருந்தபோதும், உண்மையைச் சொல்லமுடியாமல், வெறுமனே தலையசைத்து ''இரவில் சரியாகத் தூங்கவில்லை. அதுதான் சும்மா கண்ணை மூடிக் கொண்டு இருந்தேன்'' என்றாள் மயூரி.

அவர்கள் இருவருமாய் வீட்டுக்குப் போகலாம் என்று கிளம்பியபோது மீனாட்சி தடுத்தாள். ''நேற்றிலிருந்து பார்த்துக் கொண்டே இருக்கிறேன். அவ்வளவாக நன்றாகவே இல்லை. எப்போதும் அசந்தே கிடக்கிறாள். முதல் பிரசவம். ஒரு மாதம் வரை முன்னே பின்னே ஆகக் கூடும். எதற்கும் பிள்ளை பிறந்து உடம்பு தேறும் வரை இங்கேயே இருந்து விடுங்கள்'' என்றாள்.

சோர்வின் காரணம் மயூரிக்குத் தெரியுமே. எனவே ''எனக்கு ஒன்றும் இல்லை அத்தை. சரியாகத் தூங்காததால், வந்த

சோர்வு. அவ்வளவுதான்'' என்று கணவனிடம் கூறியதையே திருப்பிச் சொல்லி சமாளிக்க முயன்றாள்.

ஆனால் ''எதனால் வந்தாலும் சோர்வு சோர்வுதானே?'' என்று கேட்டாள் மீனாட்சி. ''இந்தச் சமயத்தில் கூட இருக்க ஒரு பெண் துணை வேண்டும். கல் மாதிரி நான் நன்றாகத்தானே இருக்கிறேன்? ஒரு வேளை மாமியார் என்பதால் என்னோடு இருப்பது உனக்குக் கஷ்டமாக இருக்கிறதாம்மா?''

''அப்படி ஒன்றும் இல்லை அத்தை'' என்றுதான் மயூரி சொல்ல வேண்டியிருந்தது.

சிரித்து விட்டு, ''நேரடியாக நீ இப்படிக் கேட்டால் பாவம் அவள் வேறு என்ன சொல்ல முடியும்?'' என்றார் குருபாதம் கிண்டலாக. கூடவே ''ஆனால் பரதன் வேறு நம் காகித ஆலை தொடர்பாக ஒரு வாரம் டெல்லிக்குச் செல்ல வேண்டியிருக்கும் போலத் தோன்றுகிறது. அதனால், இப்போதைக்கு இங்கேயே இருந்து விடம்மா'' என்று முடிவு கூறினார்.

ஒரு வாரமா? ஏழு நாட்கள் அவனைப் பாராமல் எப்படி இருக்க முடியும்?

மயூரிக்கு முதலில் தோன்றியது இந்த எண்ணம்தான்.

ஒரு நாள் இரவில் இங்கிருந்து கிளம்பி, மறுநாள் இரவு அங்கிருந்து கிளம்பி சென்னைக்கு வந்து விட்டான். இடையில் முழுசாகப் பாராதது ஒரே ஒருநாள்தான். அதற்குள் இந்தப் பாடுபட்டு விட்டாளே! இன்னும் ஒரு வாரம் பார்க்க முடியாது என்றால் எப்படி?

எண்ணமிடும்போதே தன் முட்டாள்த்தனத்துக்காக மயூரி தன்னையே கண்டித்துக் கொண்டாள்.

மனுபரதன் கோவை சென்றபோது அவள் கலங்கியதின் காரணமே வேறு. 'சரித்திரம் திரும்பி விட்டதோ' என்ற பயமும் அதனால் வேதனையுமாக அவளைத் தினறடித்து விட்டன.

ஆனால் இப்போது அப்படியில்லையே?

அவன் தொழில் தொடர்பாகப் போகிறான். அத்தோடு இனிமேல் மனுபரதன் அப்படிப்பட்ட தப்புத் தண்டாவெல்லாம் செய்ய மாட்டான் என்ற நம்பிக்கையும் வந்து விட்டது.

அப்புறம் ஒரு வாரமோ, பத்து நாட்களோ பிரிந்திருப்பதில் என்ன நஷ்டம்?

ஒன்றுமில்லை என்று உள்ளூரச் சொல்லிக் கொள்ளும் போதே அவளுக்குச் சோர்வாகத்தான் இருந்தது.

மனுபரதன் டெல்லிக்குச் செல்ல வேண்டிய நாளும் எதிர்பார்த்ததை விட வெகு விரைவிலேயே வந்தது.

தொழில் துறைக் காரியதரிசி ஒரு மாதப் பயணமாக வெளி நாடு செல்வதால், உடனே வந்து பேசுமாறு தகவல் வந்தது.

எனவே, மனுபரதன் கோவையிலிருந்து திரும்பி வந்த மறுநாளே, வடக்கு நோக்கிப் பயணமானான்.

அலைபாயவோ அல்லல் படவோ காரணம் எதுவும் இப்போது இல்லை என்று கிட்டத்தட்டத் தெரிந்த பிறகும் மயூரியால் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

கிட்டத் தட்டத்தானே? முழுமையாக மனுபரதன் மாறி விட்டான் என்று அவளுக்கு என்ன நிச்சயம்? கோவையில்

சோர்
திரு

லை. கடன்காரர்தான் டிடியே கொடுத்து
ளையாக வந்து விட்டான்.

டல்லி அப்படி இருக்கும் என்று எப்படி
ம்?

அவனே ஆணழகன். வெளியே ஏதாவது விழாக்களுக்குச் செல்லும்போது எத்தனை பொறாமைப் பார்வைகளை மயூரி சந்தித்திருக்கிறாள்?

அந்தப் பெண்களைப் போல எவள் அவனைச் சுற்றுகிறாளோ? அவனோ பெண் விஷயத்தில் இப்படி அப்படி என்று அவன் தாயே சொல்லியிருக்கிறாளே! அந்தப் பெண்களில் ஒருத்தியை ஏற்றிருக்க மாட்டான் என்று என்ன நிச்சயம்?

இந்தக் கவலைகள் ஒரு பக்கம் என்றால் மனுபரதன் வேளைக்குச் சாப்பிட்டானோ என்னவோ? தூங்கியிருப்பானோ? அல்லது அவளைப் போலவே தூக்கமின்றிக் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்கிறானோ? தூக்கம் கெட்டால் அவனுக்கு உடம்புக்காகுமா? ஒரு வாரம் ஆயிற்றே என்று இது மாதிரியும் எத்தனையோ கவலைகள்.

இப்படி எத்தனையோ கவலைகளில் மயூரி இப்போதும் மனம் சோர்ந்துதான் இருந்தாள். அதைச் சமாளித்துக் கொண்டுதான் நடமாடினாள்.

உடல் நலமில்லாத ஓர் உறவினரைப் பார்த்து விட்டு வருவதாக மீனாட்சி சென்றுவிட மாலைப் பலகாரம் கொண்டு வந்த மருகளிடம் குருபாதம் பேசினார்.

"என்னம்மா உனக்கும் பரதனுக்கும் இடையில் இன்னும் ஒன்றும் சரியாகவில்லை போலத் தெரிகிறதே. ஏன்? என்ன தகராறு?" என்று நேரடியாக விசாரித்தார்.

எதிர்பாராத இந்தக் கேள்வியில் ஒரு கணம் திகைத்து விட்டு மயூரி தரையைப் பார்த்தாள்.

இவரிடம் என்னவென்று சொல்வது?

பிரச்சினை என்னவென்று அவளால் சொல்ல முடியவில்லை என்பதைக் காட்டிலும் 'எல்லாம் சரியாகி விட்டது' என்றும் சொல்ல முடியவில்லையே, என்பதுதான் அவளுக்கு அதிகத் துன்பமாக இருந்தது.

அவளை ஊன்றிக் கவனித்து விட்டு "அந்தப் பத்து லட்சம், உன் தந்தை கொடுக்க வேண்டிய பணம், அதற்குச் சரியான கணக்கு இல்லை... அதாவது பரதன் தந்த கணக்கு, சரியான கணக்கு அல்ல. என்ன ஆயிற்று? உனக்காக விட்டுக் கொடுத்தானா? அப்படியானால் நீ ஆத்திரப் படுவதில் அர்த்தம் இல்லை..! வேறு என்ன நடந்தது?" என்று கேட்டார்.

என்ன நடந்தது? –

மனுபரதனின் விளக்கப்படி வியாபாரம்.

கடவுளே. இதெல்லாம் கூட முக்கியத்துவம் இழந்து போய் விடுமா? அதை நினைக்கவே இல்லையே? இவர் விளக்கம் கேட்ட பிறகுதானே நினைவே வருகிறது? என்ன கேவலம்..!

விழி உயர்த்தி அவரை வெறித்துப் பார்த்தாள் அவள்.

சற்றுத் திகைத்தார் குருபாதம். "பரதன் லேசில் பணத்தை விட்டுக் கொடுக்கிறவன் அல்ல. பணமாக இல்லாவிட்டால்

பொருளாகவேனும் அதன் மதிப்பு வந்து விடும். இந்தப் பெண் விவகாரத்தில்..'' என்று சொல்லிக் கொண்டே வந்தவரின் கண்கள் விரிந்தன. ''இந்தப் பணத்துக்கு ஈடாக... வேண்டாம். நீ எதுவும் சொல்ல வேண்டாம். விவரம் புரிந்து விட்டது'' என்று தலையசைத்தார் அவர்.

சற்று பொறுத்து அவரே தொடங்கினார். ''சற்றுத் தூண்டித் துருவிக் கேட்டதற்கு அப்படிச் சும்மா பணத்தை விட்டு விட மாட்டேன் என்கிற நம்பிக்கை இன்னமும் வரவில்லையா என்று கேட்டு வாயை அடைத்து விட்டான். சின்ன வயதில் கையில் பணத்தைக் கொடுத்து விட்டு ஒதுங்கிக் கொண்டதன் பாவம், கூடச் சேர்ந்து பழகிவிட்டு, இப்படி இருக்கிறானே என்றெல்லாம் நினைத்தேன். உன் வெறுப்பும், கோபமும் இப்போது புரிகிறது. ஆனால் ஒன்றம்மா, இது உன் அத்தைக்குத் தெரிய வேண்டாம். தாங்க மாட்டாள்'' என்று வேண்டிக் கொண்டவர் ஒரு பெருமூச்சுடன் மீண்டும் தொடர்ந்தார்.

''இந்த வீடு உனக்கு நரகமாக இருப்பதில் ஆச்சர்யப்பட ஒன்றும் இல்லை. பிள்ளை மீது கூடப் பிடிப்பு இல்லாதிருந்ததின் காரணமும் விளங்குகிறது. இதற்கு ஒரு வழி செய்கிறேன்; என்ன தப்பு செய்த போதும் எங்களால் பரதனை விட முடியாது. அதே சமயம் மனமில்லாதபோது உன்னை இங்கே பிடித்து வைப்பதும் தப்பு. குழந்தை பிறந்ததும், இவனை மணவிலக்கு செய்து விட்டுப் போய்விடும்மா. மனைவி என்ற முறையில் ஒரு நாலு கோடி பெறுமானம் உள்ள சொத்தை உன் மேல் எழுதி வைக்கச் சொல்லுகிறேன். ஆனால்... எங்கள் பேரக் குழந்தையைத் தந்துவிட்டுப் போ அம்மா'' என்று ஒரு கெஞ்சுதலோடு முடித்தார்.

நியாயமாய்ப் பார்த்தால், இந்த ஐடியா மயூரிக்குப் பிடித்துப் போயிருக்க வேண்டும். மனுபரதன் செய்த பெரும் பிழைக்கு நாலு கோடி அபராதம். பத்து லட்சத்துக்காகக் கேட்கக் கூடாத விலையைக் கேட்டுப் பெற்றவனுக்குச் சரியான தண்டனை.

அத்தோடு உண்டானது தெரிந்ததில் இருந்து அவளுக்கு வேண்டாதிருந்த பிள்ளை இப்போதும் கூட ஒரேயடியாக ஆசை என்று சொல்வதற்கில்லைதானே? ஏதோ பிறக்கப் போவதால், நல்லவிதமாக வளர்க்கலாம் என்பதுதானே? அந்தப் பிள்ளை நல்லபடியாகக் கையை விட்டுப் போகிறது எனும்போது அவளுக்கு வேறென்ன வேண்டும்?

ஆனால் ஏனோ மயூரிக்கு குருபாதத்தின் யோசனையை நினைத்துப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. அதை அடிப்படையாக வைத்து எதிர்காலத்தை திட்டமிடவோ அடியோடு முடியவில்லை.

இது ஏன் இப்படி என்று யோசித்தால் அதுவும் புரியவில்லை.

இருக்கட்டும் நிதானமாகப் பிறகு யோசிக்கலாம் என்று எண்ணி ''இருக்கட்டும் மாமா, குழந்தை பிறந்த பிறகு இதுபற்றி யோசித்து ஏதாவது முடிவு எடுக்கலாம்'' என்று அப்போதைக்குச் சமாளித்து வைத்தாள்.

17

மாமனாரிடம் பிறகு யோசித்துக் கொள்ளலாம் என்று சொன்ன போதும், மயூரியின் மனம் அதிலேயேதான் உழன்றது.

அவர் சொன்னது, அருமையான யோசனையே, எல்லா வகையிலும்.

இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் சொல்லியிருந்தால், 'ஆகா' என்று முடிந்தால் துள்ளிக் குதித்து, அவள் ஒத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒன்று.

கருவை அழிக்கவும், மனுபரதனைப் பழி வாங்கவும் அவள் துடித்துக் கொண்டிருந்த காலம் அது.

அத்தோடு எவ.. வளவு பணம் தருகிறேன் என்கிறார். எதிர்காலத்தைப் பற்றிய கவலையே இல்லாமல், வெகு சுகமாகவும், வசதியாகவும் சுதந்திரமாகவும் வாழலாம்.

அப்படியிருக்க, ஏன் பிடிக்கவில்லை?

இவை அனைத்துக்கும் ஒரு விடை இருந்தது.

மயூரி முட்டாள் என்பதால் அந்த விடை அவளுக்குத் தோன்றவும் செய்தது.

இப்படியாக இருக்கும் அதனால் வந்திருக்கும். தலைவிதி அப்படி, என்றெல்லாம் கற்பனை செய்து தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளும் ரகம் அல்ல மயூரி.

எனவே மனுபரதனை விட்டுப் பிரிய வேண்டுமே என்பதால்தான் அவளுக்கு குருபாதத்தின் ஆலோசனை

கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பதை உடனே புரிந்து கொண்டாள்.

அதாவது அவனைப் பிரிய அவளுக்கு விருப்பம் இல்லை.

விருப்பம் இல்லாததின் காரணம் அவன் மேல் அவள் கொண்டு விட்ட அன்பு.

இதுதான் அவளைத் திகைக்க வைத்தது.

இந்த அன்பு எப்படி வந்தது?

சிட்டுப் போலச் சிறகடித்துக் கொண்டிருந்த அவளைச் சொல்லொனாத துன்பங்களையும், இழப்புகளையும் அனுபவிக்க வைத்த அவன் மேல் அவளுக்கு எப்படி அன்பு வர முடியும்?

யோசிக்கும் போது அந்த அன்பை அவளால் நம்பக் கூட முடியவில்லை.

ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும்.

மற்றபடி, அவனது கோவைப் பயணம் அவளை அவ்வளவு தவிக்க வைப்பானேன்? இன்னொரு பெண்ணோடு இருக்கிறானோ என்ற எண்ணமல்லவா அவளை அந்தப்பாடு படுத்தியது.

அவன் மீது ஆசையில்லாவிட்டால் அவன் யாரோடு இருந்தாலும் அவள் ஏன் கவலைப்படப் போகிறாள்?

இந்த டெல்லி பயணத்தில் கூட அதுதானே அந்த சந்தேகம் தானே அவளை அதிகமாக வருத்திக் கொண்டிருப்பது?

யோசிக்க யோசிக்க அவளது நேசம் சர்வ நிச்சயமாக அவளுக்கு உறுதிப்பட்டது.

இனம் புரியாத ஒரு சுகமும், தாகமுமாக, மயூரியின் மனம் தன் புதிய கண்டுபிடிப்பையே சுற்றிச் சுற்றி வந்தது.

இவ்வளவு காலம் கழித்து மனுபரதன், மனைவியின் வசதிக்காகவும், சுகத்துக்காகவும் பலதும் செய்த பிறகுதான் இந்தப் பிரியம் உண்டானதாகச் சொல்ல முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது.

முதலில் 'சுகந்தத்'திலேயே இவனை நல்ல சூழ்நிலையில் நல்ல விதமாகச் சந்திக்கவில்லையே என்று எண்ணினாளே?

அவனைத் திருமணம் செய்வதற்காக, அவள் தனக்குத் தானே சொல்லிக் கொண்ட காரணங்களும், எவ்வளவு பைத்தியக்காரத்தனமானவை.

குழந்தை இலகுவாக அவன் கைக்குப் போய்விடாமல் தடுப்பதற்காகத் திருமணமா? அவளே வளர்ப்பதாகச் சொல்லி விட்டால் அவனால் என்ன செய்திருக்க முடியும்? ஒன்றும் முடியாதே?

ஒருவனைப் பழி வாங்குவதற்காகத் திருமணம் செய்வார்களா?

தன் குழந்தை தகப்பன் பெயர் தெரியாத பிள்ளையாக அவமானப்பட்டு வளர்கிறது என்பதே அவனுக்குப் பெரும் தண்டனை அல்லவா? அதிலும் அவனைப் போலப் பிள்ளைக்காகத் திருமணமே செய்ய முன்வந்தவனுக்கு.

ஆராய்ச்சிக் கண்ணோடு அலசிப் பார்த்தால், எல்லாமே மனுபரதனை மணப்பதற்காக அவள் கண்டுபிடித்த சாக்குகளாகத்தான் இப்போது அவளுக்குத் தோன்றின.

இந்தத் தெளிவு, அப்போது இல்லையே!

அவள் வாயாலேயே அவனைத் தூர நிறுத்தி விட்டாளே!

என்னென்ன கொடிய வார்த்தைகள், குத்தல்கள்.

ஏளனப் பேச்சினால், கணவனை எத்தனை முறை முகம் கறுக்க வைத்திருக்கிறாள்.

இன்னொருத்தனாக இருந்தால், என்ன ஏரளவு பொறுத்துப் போகிறவனாக இருந்தாலும் கூட எப்போதோ மனம் வெறுத்துப் போயிருப்பான்.

ஆனால், மனுபரதன் எப்படிச் சகித்தான்?

ஒரொரு முறை, அவள் மண்டையில் குட்டினாலும் கூடப் பெரும்பாலும் பொறுத்துத்தான் போயிருக்கிறான்.

இத்தனைக்கும் அவன் ரொம்பவும் பொறுமைசாலி என்று சொல்ல முடியாது. அந்த ராமலிங்கத்தை உடனேயே வேலையை விட்டுத் தூக்க வேண்டும் என்றானே?

எனவே பொறுமை, மனைவி - அதாவது அவளிடம் மட்டும்தான் போலும்.

இதற்கு மேலும் தனி அர்த்தம் இருக்கிறதா?

ஆவலோடு கணவனை ஆராயத் தொடங்கினாள் மயூரி.

சாதகமான குறிப்புகள் நிறையவே கிடைத்தன.

திருமணம் ஆனதிலிருந்து பெரும்பாலும் அவள் பேச்சையெல்லாம் அவன் பொறுத்துப் போனது, அவளுக்காக அவன் வாங்கி வந்த பொருட்கள் எல்லாவற்றுக்கும் மேலாக

அவளுக்கு விசிறியது. கைத்தோல் வழன்று போகும் அளவுக்கு மணிக் கணக்காக விசிறியவனுக்கு அவளிடம் பிரியம் இருக்கத்தானே செய்யும்?

அப்புறம் ஜெனரேட்டர் வேறு. அதுவும் இரண்டு வீடுகளிலும்!

அதற்கும் முன்னதாக 'கல்லூரியில் இன்னும் இரண்டு ஆண்டு படித்திருக்க வேண்டும்' என்று அவள் சொன்னபோது ஒரு மாதிரி ஏக்கமாகப் பார்த்தானே?

அன்றைக்கே அவளுக்கும் அவனது பார்வை அவளை உறுத்திக் கொண்டே இருந்ததே? அப்போதே அவள் யோசித்திருக்க வேண்டும் தன் உறுத்தலைப் பற்றி.

ஆனால் 'பழி பழி' என்று முட்டாள்த்தனமாகக் கோட்டை விட்டிருக்கிறாள்.

பார்வையைப் பற்றிய யோசனை மனுபரதனின் சமீபத்திய தேடல் பார்வைகளை நினைவூட்டின.

அந்தப் பார்வைகளைத் தப்பாக, பெண்ணாசைப் பார்வைகளோ என்று எண்ணியல்லவா, அவனது கோவைப் பயணத்தின் போது தவித்தாள்.

கடைசியாகப் பார்த்தால், அவை அவளது அன்பிற்காக ஏங்கிப் பார்த்த பார்வைகள்.

யோசிக்க யோசிக்க மயூரியின் மகிழ்ச்சியும் உற்சாகமும் குபுகுபு'வென்று பொங்கிப் பெருகத் தொடங்கின. இனி அவள் வாழ்வே ஆனந்தமயமாகி விடப் போகிறதே!

முதலில், அவன் செய்த 'வியாபாரம்' இப்போதும் மனதை உறுத்தத்தான் செய்தது. ஆனால் அது தப்பு என்று அவன் உணர்ந்து விட்டான். அவளிடம் அதை ஒப்புக் கொண்டு பிராயச்சித்தம் செய்யவும் முன்வந்தான். அதற்கு மேல் என்ன?

மனம் தெளிவாகி விட்டதால் மயூரிக்கு கணவன் எப்போது திரும்ப.வருவான் என்று உள்ளூர ஏக்கமாக இருந்தது.

இரண்டு நாள் பயணத்தை ஒரே நாளில் முடித்துக் கொண்டு கோவையிலிருந்து திரும்பி வந்த மாதிரி இப்போதும் வந்துவிட மாட்டானா என்று ஆசைப்பட்டாள்.

புதையல் கிடைத்தவன் அதை மறுபடி மறுபடி எடுத்துப் பார்ப்பது போல மயூரி மனுபரதன் தொடர்பான நிகழ்ச்சிகளைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

அவை எல்லாமே மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் அல்லதான். சொல்லப்போனால் அவற்றுள் பெரும்பான்மைச் சம்பவங்கள் அலட்சியம், ஆத்திரம், வெறுப்பு, வேதனை, ஏளனம் என்று எதிர்மறை உணர்ச்சிகளை ஏற்படுத்தியவை தான்.

ஆனாலும் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விட்ட இன்று, அந்தச் சம்பவங்களும் கூட ஆசையாக அசை போடத் தகுந்தவைகளாகவே தோன்றின.

முதல் நாள், மனுபரதனை விரட்டியதை நினைத்துப் பார்க்கையில் இப்போது சிரிப்புதான் வந்தது. பாவம், வாழ்க்கையில் முதல் முறையாக நேர்ந்த அவமதிப்பில் தினறிப் போயிருப்பான்.

மனுபரதனின் தோற்றப் பொலிவு நினைவு வர அதைக் கொஞ்சமும் கவனிக்கக் கூட இல்லாமல் அவனைத் தன்னால் எப்படி விரட்ட முடிந்தது என்று அவளுக்கே ஆச்சரியம்தான்.

அடுத்து அவனது டெலிஃபோன் பேச்சு.

திமிராகத்தான் பேசியிருக்கிறான்.

இருக்கட்டும். மனுபரதன் வந்ததும், அதைப் பற்றிப் பேசிக் கிண்டல் செய்ய வேண்டும். நெளிவான்; ஆயினும் அந்த மாதிரித் திமிராகப் பேசினால் பலனாகக் கொஞ்சம் பட்டுத்தான் ஆக வேண்டும். இல்லையா?

அடுத்த சந்திப்பு, இப்போதும் அவளுக்கு ஆத்திர மூட்டியது.

என்ன அலட்சியம், என்ன ஒரு 'வியாபாரம்'?

அது தப்புதான் என்று அவனே அவளிடம் ஒத்துக் கொண்டு வருத்தமும் தெரிவித்த பிறகும் கோபப்படுவது கூடாதுதான். எனவே அதை மறக்க முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து 'சுகந்தத்'தில் கழித்த இரு தினங்கள்.

இந்த இரண்டு நாட்களின் நினைவை மயூரி முடிந்த அளவு ஒதுக்கி வைத்திருந்தாள். அவளால் இயன்ற அளவுக்கு. ஆனால் அவளையும் மீறி ஞாபகம் வரும்போது கட்டுப்படுத்த முடியாமல் நினைவு வரத்தான் செய்யும். அப்போதெல்லாம் அவள் மனதில் மிகவும் அவமானப்படுவாள்.

அவமானம் இங்கே நிகழ்ந்தவைகளுக்காக மட்டுமல்ல, அவற்றை அப்போது அவள் அடியோடு வெறுக்கவில்லை என்பதற்காகவும்தான். அப்போதும் மனம் சுயமாக வேலை

செய்தபோது மிகவும் வருத்தப்பட்டாள்தான். ஆனால் அந்த நிலைமைக்கு உரிய அளவு வெறுப்பையோ அருவருப் பையோ அவள் உணரவில்லை என்பது அவளுக்கு மட்டுமே தெரிந்த விஷயம்.

சொல்லப் போனால் அந்த இரண்டாவது காரணத்துக் காகத்தான் அவள் அதிகமாகக் குன்றிப் போனது.

ஆனால், இந்தக் குற்றத்தையும் மனுபரதன் மீதே சுமத்தியிருந்தாள் அவள்.

அவன் அனுபவப்பட்டவனாம். அறியாப் பெண்ணான அவளை அவனது விருப்பம் போல வளைத்து விட்டானாம். அதனால் அவன் இருமடங்கு குற்றவாளியாம்.

ஆனால் இப்போது அவள் மனம் வேறுமாதிரி சிந்தித்தது.

மனுபரதனும் அவளும் ஒருவருக்கொருவர் இணையாகப் படைக்கப்பட்டவர்கள். அதனாலேயே அன்றைய மோசமான நிலைமையில் கூட அவள் அந்த சூழ்நிலைக்கு உரிய உணர்ச்சிகளை அனுபவிக்கவில்லையாம்.

மற்றபடி, அன்றைக்கு அவனைப் பார்த்தாலே அவளுக்கு வெறுப்பாயிருக்க வேண்டும். ஆனாலும் அப்போதும் பல சமயங்களில் அவனது தோற்றம் அவளுக்குப் பிரமிப்பாகத் தானே இருந்தது.

எனவே அவளது கருத்து சரியாகத்தான் இருக்க வேண்டும்.

சரியான முடிவுக்கு வந்துவிட்ட மகிழ்ச்சியோடு மயூரி கணவனைப் பற்றிய நினைவுகளைத் தொடரலானாள்.

அப்போதுதான் அவளுக்கு ஒரு பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது.

அடுத்து மயூரி மனுபரதனைச் சந்தித்த சூழ்நிலை!

அவளது வாழ்வின் மிகுந்த சோகமயமான நேரத்தில் அவள் அவனைப் பார்த்தாளே, பார்த்துக் கொதித்தாளே!

மூட்டைகளாகக் கிடந்த பெற்றோரைப் பார்த்து தற்கொலை செய்யும் அளவு அவர்கள் தவித்ததை எண்ணி அவள் துடித்தபோது அல்லவா, மனுபரதனை அவள் மீண்டும் பார்த்தது.

வெள்ளையும் நீலமுமாக கோடு போட்ட சட்டை அணிந்து, அத்தனை பேரையும் விட உயரமாய் நின்றானே!

அவனது முயற்சியால்தான் இவளுடைய பெற்றோரின் உடல்கள் சீக்கிரமாகக் கிடைத்ததாகக் கூடச் சொன்னார்கள்.

ஆனால் அவனால் அல்லவா அவளைப் பெற்றவர்கள் உயிர் இல்லாத உடல்களாக ஆனார்கள் என்று எண்ணிக் கொதித்ததும் கூட மயூரிக்கு அப்படியே நினைவு வர அவள் அப்படியே அயர்ந்து போனாள்.

அவளுடைய அருமைப் பெற்றோரின் மறைவுக்குக் காரணமான இந்த உலகத்தையே வெறுத்து, அருமை மகளைக் கூட மறந்து தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு அவர்களை விரட்டிய மனுபரதனோடு அவளால் எப்படி மனம் ஒன்றி வாழ முடியும்?

நிச்சயமாக முடியாது.

18

மனுபரதன் இப்போது எவ்வளவோ மாறிவிட்டிருந்தான்.

வெறும் இரண்டே நாள் சுகத்துக்கு உரிய கருவியாக அன்றைக்கு மயூரியை எண்ணியவன் அல்ல இவன்.

அவளது மனம் என்ன பாடுபடும் என்று அறிந்திருந்த போதும், அதை அலட்சியம் செய்து, அவனது விருப்பத்துக்கு, அவளை வளைய வைத்தவன் இன்று அவளுக்கு வியர்ப்பதைக் கூடத் தாங்க மாட்டாமல், கை புண்ணாக விசிறுகிறான்.

அவளது மன நிம்மதிக்காக, என்ன செய்யவும் தயாராக இருக்கிறான்.

ஆனாலும், அவளுடைய பெற்றோர், வாழ்வை வெறுத்து சாவைத் தழுவக் காரணமான அவனோடு மகிழ்ச்சியோடு உறவாட, அவளால் எப்படி முடியும்?

ஐந்தறிவு படைத்த மிருகமாக இருந்தால், முடிந்திருக்கும். ஆனால் அவளுக்கு ஆறாவது அறிவும் இருக்கிறதே, அது ஒரு நாளும் ஒப்பாதே.

பழைய கால மன்னர்கள் எதிரி நாட்டு அரசனைக் கொன்று அவன் மகளை மணந்து கொண்டதாகப் படித்த சில வரலாறுகளை நினைத்துப் பார்த்தாள். அந்த அரச குமாரிகள் எப்படிக் கணவனோடு வாழ்ந்தார்கள்? அதிலும், அந்தக் காலத்து வழமைப்படி, 'கணவனே சகலமும்' என்று கூட வாழ்ந்திருக்கக் கூடும்.

எப்படி முடிந்தது?

மயூரியால், நிச்சயமாக முடியாதே!

பெரிய இழப்பாக உணர்ந்த மயூரிக்குக் கண்ணீர் துருத்திக் கொண்டு வந்தது.

ஆனால் கண்ணீரை வெளிக்காட்டவும் அவளுக்குப் பயமாக இருந்தது.

சும்மா முகம் வாடி இருந்ததற்கே பிரிவுக்கு ஏற்பாடு செய்வதாக மாமனார் கூறுகிறார். இன்னும் அழுதது வேறு தெரிந்தால், வேறு வினையே வேண்டாம்.

'இன்றைக்கே தனித்து வாழ வைக்கிறேன். பிறந்ததும், என் பேரக் குழந்தையை மட்டும் என்னிடம் தந்துவிடு' என்பார்.

கண்ணாலேனும் பார்த்துக் கொண்டு ஒரே வீட்டில் வசிக்கும் இப்போதைய நிலை கூடப் பறிபோய்விடும்.

வெகு சிரமப்பட்டு முகத்தைச் சீர் செய்து கொண்டு நடமாடிய போதும், மயூரியின் மனம் உள்ளே தவித்துக் கொண்டே இருந்தது. இனி வாழ்க்கை முழுவதும் இதே தவிப்புதானா? எப்படித் தாங்க முடியும்?

தாங்குவது மகாக் கடினம் என்ற போதும், அதைத் தவிர்க்க வழியே இல்லையே!

இல்லையா, இல்லவே இல்லையா என்று மனதில் அதே தேடல்.

இருந்தது. போகாத ஊருக்கு வழி என்கிற மாதிரி ஒரே ஒரு வழி இருக்கவே செய்தது.

சுயம்புலிங்கம் தம்பதி தற்கொலை செய்து கொண்டு மடியவில்லை. தற்செயலாக நேர்ந்த விபத்துதான். அவர்களது

உயிரைப் பறித்தது என்று நிருபணம் ஆனால், இந்தத் தவிப்பைத் தவிர்க்க முடியும். அது மட்டுமின்றி ஓர் இனிய வாழ்வும் கூட அவளுக்கு அமையக் கூடும்.

ஆனால், முதலிலேயே சொன்ன மாதிரி அது போகாத ஊருக்கு வழிதானே?

சுயம்புலிங்கம் தம்பதியர், தற்கொலைக் குறிப்பு எதுவும் எழுதி வைக்கவில்லைதான். போலீஸ் குறிப்பு, அவர்களது மரணத்தை சந்தேகத்துக்கு இடமற்ற இயற்கை விபத்து என்று அடித்துச் சொன்னது. ஆயினும் மயூரிக்கு உண்மை தெரியுமே!

தந்தை மனம் நொந்ததும், மனுபரதனால் ஏற்படக் கூடிய அவமானத்துக்குச் சாவு மேல் என்று அவர் கருதியதும் அவள் அறிவாளே?

தொடர்ந்த விபத்து, அவளுடைய தகப்பனார், வேண்டும் என்றே ஏற்படுத்திக் கொண்டது என்பதும், அவளுக்கு நிச்சயமே!

''அது தற்கொலையல்ல! விபத்து'' என்று மனுபரதன் அழுத்தம் திருத்தமாகச் சொன்னதும், மயூரிக்கு நினைவு வந்தது.

அப்படி மட்டும் ஆகி விட்டால்... என்று ஏங்கியது அவள்மனம். வாழ்நாளில் இதுவரை எதற்காகவும் அவள் இந்த அளவு ஏங்கியதில்லை. அவ்வளவு தவிப்பு!

பெற்றோரை இழந்தது பெரும் வேதனைதான். இருவரும் மறைந்து, இத்தனை மாதங்கள் சென்ற பிறகும், உடம்பெல்லாம் வலிக்கிற மாதிரி உணர்வோடு அவ்வப்போது அவர்களது அருகாமையை அவள் தேடுவது உண்டுதான்.

ஆனால் இறைவன் கொடுத்த உயிர் அவனிடமே போய்விட்டது என்று ஏதோ ஒரு சமாதானமும் அவளால் செய்து கொள்ள முடிந்தது.

வாழ்வில் திருப்பத்தை நாடித் திருப்பதிக்குச் சென்றவர்கள், அந்த திருப்பம் கிடைத்தோ, கிடைக்காமலோ வீட்டுக்குத் திரும்பி வரும் போது தானாகவே அவர்களைமீறி இறைவனடி சேர்ந்திருந்தால், அது வேறு விஷயம்.

ஆனால் அந்த உயிர் போகக் கருவியாகக் கணவன் இருந்திருந்தால், அது முழுக்க முழுக்க வேறு விஷயம் ஆயிற்றே?

ஒன்றின் மேல், மிகுதியாக ஆசை வைக்கும் போது அதை அடைவதற்கான வழி முறைகளை மனம் எப்படியாவது கண்டுபிடித்து விடும்.

இப்போதும் மனுபரதனோடு மனம் ஒன்றி வாழத் துடித்து மயூரியின் மனம் அதற்கான வழி முறை ஒன்றைக் கண்டுபிடித்தது.

அதற்காக, அவள் தன் கொள்கையைப் பறக்க விட்டு விட்டு மனுபரதனின் கைகளுக்குள் சரணம் அடைந்து விடவில்லை. அதற்குப் பதிலாக ''உன் பெற்றோரின் மரணம் தற்கொலையல்ல விபத்து'' என்று கணவன் சொன்னது உண்மையாக இருக்குமா என்று அதன் சாத்தியக் கூறுகளை ஆராயலானாள்.

அவளுக்கே அதில் நம்பிக்கை இல்லைதான். ஆனால் நூற்றில் ஒரு வாய்ப்பாக ஒரே ஒரு சதவீதமாக மனுபரதன் சொன்னது உண்மையாக இருக்குமாயினும் கூட அதை ஆராய்ந்து அறிந்து விடுவது மேல் அல்லவா?

தன் ஏக்கம், ஆசை, வேதனை, வருத்தம் அனைத்தையும் ஒதுக்கி வைத்து விட்டு, மயூரி யோசித்தாள். 'ஒன்றே குறியாக' என்பார்களே, அதுபோல, ஒரு முகப்படுத்தப்பட்ட தீவிரத்துடன்.

அவளுடைய தந்தை சுயம்புலிங்கம் மனைவியோடு வேண்டும் என்றே ஒரு விபத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தற்கொலை செய்து கொண்டதாக மயூரி முடிவு செய்ததற்கான காரணங்கள் மூன்று.

ஒன்று, சாவு பற்றி சுயம்புலிங்கம் பேசியது. ஆனால் வெறும் பேச்சை அடிப்படையாகக் கொண்டு, இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியைத் தீர்மானிப்பது தவறு. 'செத்து விடலாம்போல இருக்கிறது' என்று சொல்வது வேறு. நிஜமாகவே செத்துப் போவது வேறு. எனவே அந்தப் பேச்சைப் பெரிதாகக் கருதாமல் விட்டு விடலாம்.

அடுத்த இரண்டில் ஒன்று எல்ஐசி ஏஜண்ட். முன்தினம் தான் சுயம்புலிங்கம் பாலிசி எடுத்ததாகக் கூறியது. மற்றது தில்லைநாயகம் இயல்பாகக் கூறியதில் மறைந்திருந்ததாக, மயூரி தவறாக எண்ணியது.

மகளைப் பார்த்துக் கொள்ளும்படி, எப்போதுமே சுயம்புலிங்கம் சொல்லி வந்ததாக அவர் கூற, சாவுக்கு நேரம் குறிப்பிட்டு விட்டதால், அதற்கு முன் பெரியவர்களிடம் தந்தை சொல்லியதாக அவள் தவறாகக் கருதியது. ஆனால் அதுவும் அவளுடைய திருமணத்தின் போதே தெளிவாகி விட்டது.

ஆனால், அந்தப் பாலிசி விவரம்?

அது அசைக்க முடியாத பெருமலையாக அல்லவா, இருக்கிறது?

இதென்ன, மூன்றில் இரண்டு ஆட்டம் வென்றதால் இவர்களே வென்றவர்கள் என்று சொல்லக் கூடிய ஏதாவது விளையாட்டா?

இல்லையே!

முந்திய நாள் பாலிசி எடுத்து, அடுத்த நாளே விபத்துக்குள்ளாதி இறந்தார் என்றால், அதுவும் சுயம்பலிங்கத்தைப் போன்று திறமையாக ஓட்டுகிறவரின் கார் விபத்துக்குள்ளாகி, அதில் இரண்டே பேர் இருந்து, அந்த இரண்டு பேருமே இறந்து போவது என்றால், அது தற்செயலாக நடந்த விபத்தாக எப்படி இருக்க முடியும்?

உள் விவகாரம் அறியாத, அந்த எல்ஐசி ஏஜண்டால் அப்படி நம்பி பிறரை நம்ப வைத்துப் பணத்தை வாங்கிக் கொடுக்கவும் முடிந்தது. ஆனால் மயூரிக்கு ஏன் எதனால், என்று எல்லாம் தெரியுமே! அவள் எப்படி நம்புவாள்?

நிச்சயம் அவளுடைய பெற்றோரின் மரணம் தற்கொலைதான்.

இதைப் பற்றி ஆராய்ந்து, மனதை இன்னமும் குழப்பிக் கொள்வது முட்டாள்தனம்.

அவளுக்கு வாய்த்தது இவ்வளவுதான் என்று நிராசையுடன் முடிக்கும் போதே அந்த எல்ஐசி மனிதரின் நினைவு உறுத்தியது.

கண்ணை மூடி, அவரது தோற்றத்தை மனக்கண் முன் கொணர்ந்து ஆராய்ந்தாள்.

அவர் ஒன்றும் வெகு இளைஞர் அல்ல. கிட்டத்தட்ட அவளுடைய தந்தையின் வயது அவருக்கும் இருக்கும்.

அந்த வயதுக்கு அவரும் இதுபோல எத்தனை பேரைப் பார்த்திருப்பார்.

அவருக்கு அவளுடைய தந்தையைப் பற்றிச் சந்தேகம் இருந்ததாகவே தெரியவில்லையே?

அப்படியானால் அவளது ஊகம் தவறாக இருக்கக் கூடுமா?

இப்போதும், ஒரே ஒரு சதவீதம்தான். ஆனால் அதையும் தெளிவுபடுத்திக் கொள்ளாமல் சும்மா இருக்க மயூரிக்கு விருப்பம் இல்லை.

எனவே, அந்த ஏஜண்டைப் பார்த்துப் பேச முடிவு செய்தாள்.

அப்போதுதான், அவரது பெயரைக் கூட அவள் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை என்பது நினைவு வந்தது. அதை அறியும் எண்ணமே, அப்போது வரவில்லை. அவளது துக்கத்தோடு அவளைத் தனியே விட்டு விட்டு எல்லோரும் போய்விட மாட்டார்களா என்றுதான் இருந்தது.

ஆனால் மனுபரதன் சொன்னது போல அவளுக்குச் சாதாரண மரியாதை கூடத் தெரியவில்லைதானோ என்று இப்போது மயூரிக்குத் தோன்றியது.

என்ன மாதிரி நிலைமையாக இருந்தால் என்ன? மெனக்கெட்டு ஒருவர் அவளுக்குச் சேர வேண்டிய பணம் என்று ஒரு பெரும் தொகையைக் கொண்டு வந்து தருகிறார். அவரோடு நல்லபடியாக நாலு வார்த்தை உரையாடக் கூட அவளுக்குத் தெரியவில்லையே? உரிய முறைப்படி அவருடன் பேசியிருந்தால், அவரது பெயர் எந்தப் பிரிவு

என்பதெல்லாம் அறிமுகத்திலேயே அவளுக்குத் தெரிய வந்திருக்குமே?

இப்படிச் செய்வதறியாது இப்போது விழிக்க வேண்டியிராதே?

அந்த ஏஜண்டின் பெயர்கூடத் தெரியாமல், யாரிடம் போய், என்னவென்று விவரம் கேட்பாள்?

திருப்பதியில் பாலிசி எடுத்ததாகச் சொன்னாரே! அவர் ஆந்திராவைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

அப்போது இருந்த மனநிலையில் செக்கைப் பாங்கில் போட்டுப் பணம் வந்ததும், அதைக் கடன்காரர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, தந்தையின் கடன்களை ஒய்த்து முடிப்பதில்தான் அவளது முழுக் கவனமும் இருந்தது.

எல்லாப் பணக் கணக்குகளையும் முடித்தவள், பாங்க் கணக்கைக் கூட அல்லவா முடித்து விட்டாள். அதிலிருந்து எது எங்கிருந்து வந்தது என்பதை அறியும் வாய்ப்புக் கூட இப்போது இல்லை.

'இந்த வாழ்வுக்கே ஒரு முழுக்கு' என்று கணக்கு முடிந்த பத்திரங்கள், மற்ற காகிதங்கள் குறிப்புகள் அனைத்தையும் கிழித்து எரித்திருந்தாள்.

'இரண்டு ஆண்டுகளாகத் தொல்லை செய்தாகக் கூறியவர் யாராக இருக்கக் கூடும் என்று அறியும் வாய்ப்பைத் தரக்கூடிய ஒரு டெலிஃபோன் எண் டைரியைக் கூட அவள் தன்னோடு வைத்துக் கொள்ளவில்லை.

அன்றைக்கு அவ்வளவு தூரம் அவள் மனம் சலித்துப் போயிருந்தது.

இன்றைக்கு இப்படித் தேவைப்படக் கூடும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

கடைசியாக அந்த ஒரு சதவீத வாய்ப்பை என்னவென்று தெரியாமலேயே விட்டு விடப் போகிறாளா? அவளது வாழ்வுக்கு விடிவைத் தரக் கூடிய ஒரே வாய்ப்பு.

அந்த ஏஜெண்டைச் சந்தித்துப் பேசுவது கூட 'மதில் மேல் பூனை' போன்றதொரு வாய்ப்புதான். விளைவு இப்படியும் போகலாம். அப்படியும் போகலாம்.

ஆனால் அந்த விளைவு ஒரு வேளை அவளுக்குச் சாதகமாக அமைவதாக இருந்தாலும் அதைப்பற்றி அறியாமலே விட்டு விட வேண்டியிருக்கிறதே?

விடக் கூடாது!

எப்படியோ சந்திக்க வைத்து மீண்டும் ஒரு வழியில் இணைவதற்காக ஒரு குழந்தையையும் தந்து மறுபடியும் இணைத்து வைத்த கடவுள், இப்படிப் பிரிந்து வாழ்வதற்காக இதையெல்லாம் செய்ய மாட்டார்.

இருக்கும். அவர்கள் நல்வாழ்வுக்கு இன்னொரு பாதையை அவர் வைத்துத்தான் இருப்பார். அதை அவள் கண்டுபிடித்தே ஆக வேண்டும்.

தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறையாகத் தீவிரமாக யோசிக்கும் போதே மயூரியுள் ஒரு குற்ற உணர்வும் தலை தூக்கியது.

அவளுடைய பெற்றோரின் மறைவிற்காக வருந்துவதை விட அதில் அவளது மகிழ்ச்சிக்கான வழியை அல்லவா தேடிக் கொண்டிருக்கிறாள். அவ்வளவு சுயநலவாதியா அவள்?

என்பதெல்
வந்தி
ஞாயம் மீறி
181

ரு எண்ணத்தில் மயூரி மிகவும்
னாள்.

நகு மேல் ஆராய்ச்சியில் தொடர
நக்கு மனம் வரவில்லை.

அவளது வாழ்வு எப்படிப் போனாலும்
இல
ண்டியதுதான் என்று கூட எண்ணினாள்.

ஆனால்
டைய பெற்றோரே ஒப்புவார்களா?

மகள் இப்படி வருந்திக் கொண்டே இருப்பதை அவளுடைய பெற்றோர் ஒரு நாளும் விரும்ப மாட்டார்களே? ஏதோ ஒரு வழியில் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்றுதானே அவர்களும் ஆசைப்படுவார்கள்?

தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு மயூரி மேலே யோசித்தாள்.

இரண்டு லட்ச ரூபாய்க்குப் பாலிசியே எடுத்திருக்கிறார் தந்தை. தான் இறந்தாலும் தன் மகளுக்கு ஏதாவது பணம் கிடைக்க வேண்டும் என்றுதானே?

அதற்காகத்தானா? அல்லது...

அதை மயூரி கண்டுபிடித்தே தீர வேண்டும்.

அவரது பேச்சின் ஏதாவது கட்டத்தில், அவரைப் பற்றிய வேறு விவரங்கள் கிடைக்கக் கூடுமா என்று எல்ஐசி ஏஜண்டைப் பற்றியே மயூரி திரும்பத் திரும்ப யோசித்தபோது அந்த ஏஜண்டை அழைத்து வந்த சிவநேசன் ஞாபகத்துக்கு வந்தார்.

மயூரி துள்ளிக் குதிக்காத குறைதான். கிட்டத்தட்ட குதிக்கப் போனவள்தான். சமயத்தில் தன் நிலைமை நினைவு வர, தன்னை அடக்கிக் கொண்டாள். கூடவே இப்போதும் எல்ஐசி ஏஜண்டின் சந்திப்பு பாதகமானதாக முடியக் கூடும் என்று தனக்குத்தானே அறிவுறுத்தலும்.

சிவநேசனின் டெலிஃபோன் எண் அவளுக்குச் சரியாக நினைவு இல்லாத போதும் அவரது வீடும் தொழில் இடமும் மயூரிக்குத் தெரியும்.

எனவே சற்று வெளியே போய் வருவதாக, மாமனார், மாமியாரிடம் சொல்லி விட்டு மயூரி கிளம்பி விட்டாள்.

ஒன்பது மாதங்கள் நிறைந்து விட்ட இந்தச் சமயத்தில் அவளை விட்டு மகன் வெளியூர் சென்றதே மீனாட்சிக்குப் பிரியமில்லை. இப்போது உள்ளூரிலேயே மருமகள் வெளியே போவது அவளுக்கு எப்படிப் பிடிக்கும்?

ஆனால் ''டிரைவர்தான் இருப்பாரே, அத்தை? வேண்டுமானால் ஆயாவையும் கூட்டிப் போகிறேன்'' என்று வீட்டில் பணிபுரியும் வயது முதிர்ந்த வேலைக்காரியையும் மயூரி உடன் அழைத்துச் செல்லவே ஒருவாறு சம்மதித்தாள்.

சிவநேசனுக்கு மயூரியைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சி.

ஆச்சரியமும், சிறு வருத்தமும் கூட. ''உன் திருமணம் பற்றிச் சொல்லவே இல்லையேம்மா'' என்று குறைபட்டாலும் ''உன் தந்தையின் கனவு நனவாயிற்று'' என்று பூரித்தார்.

''அது... அப்பா இல்லாததற்குப் பெரிதாகச் செய்ய வேண்டாம் என்று நினைத்தோம் அங்கிள்'' என்று சமாளித்து விட்டு மயூரி விஷயத்துக்கு வந்தாள். ''பெரிய அளவில்

என்பதெல்
வந்தி
ாரம் மீதி
181

ாண வேண்டும் என்று
ர்கள்; அதுபற்றி விஷயம்
த ஆசை, மேற்கொண்டு
எடுக்கலாம் இல்லையா?
வந்தீர்களே, அவரது முகவரி
கோர்வையாகச் சொல்லிக்

விவரத்தை மகிழ்ச்சியுடனேயே
அவளுக்கு
னுப்பினார்.

உள்ளூரப் பல
புடனேயேதான் மயூரி அந்தக்
கோவிந்தனுடன் டெலிஃபோனில் தொடர்பு கொண்டாள்.

விளைவு, அவளுக்கு எதிர்மறையாகவும் போகலாம் அல்லவா?

அதற்குள்ளாக, சிவநேசன் அவரிடம் விஷயத்தைக் கூறியிருப்பார் போலும். கோவிந்தன் மிகுந்த உற்சாகத்துடன். அவளிடம் பேசினார்? "என்னம்மா சொல்லு, உனக்கு என்ன விவரம் வேண்டும்?" என்று கேட்டார்.

என்னவென்று சொல்லுவாள்?

தன் விஷயம் என்ன ஆனாலும் இவருக்கு லாபம் வரக் கூடியவாறு ஏதாவது செய்யும்படி கணவனிடம் கேட்க வேண்டும் என்று மனதுள் குறித்துக் கொண்டு "முதலில் என் அப்பா பற்றி உங்களிடம் பேச வேண்டும் அங்கிள். எனக்கு ஒரு உதவியாகக் கொஞ்சம் நேரம் ஒதுக்கினீர்களானால், நீங்கள் சொல்லும் இடத்துக்கு வந்து நான் உங்களைச் சந்திக்கிறேன்" என்றாள் அவள் சற்றுக் கெஞ்சலாக.

"ம்....ம்..." என்று யோசித்து விட்டு "சிவன் சொன்னார். இந்த நிலையில் நீ அதிகம் அலைய வேண்டாம். நானே உன் வீட்டுக்கு வருகிறேன். உன் விலாசம் சொல்லு" என்று கேட்டார் அவர்.

பரிவாகவும் இருக்கலாம். அல்லது வீட்டு ஆண்களிடம் பரிச்சயம் பண்ணிக் கொண்டால் தொழிலுக்கு நல்லது என்றும் வீட்டுக்கு வர எண்ணவாம் என்று நினைத்தவாறே மயூரி தன் முகவரியைத் தெரிவித்தாள்.

அதைக் குறித்துக் கொண்டபின், "ஒரு விஷயம் அம்மா. உன் தந்தை விஷயம் என்கிறாய். அதுபற்றி உன் வீட்டில் வைத்துப் பேசுவது சங்கடம் என்றால் மறைக்காமல் சொல்லிவிடு. வெளியேயே சந்திக்கலாம்" என்றார் கோவிந்தன்.

பரிவுதான்.

உள்ளூர இதமாக உணர்ந்தபடி, "வீட்டுக்கே வாருங்கள், அங்கிள். இங்கே எந்தவிதப் பிரச்சனையும் இராது" என்றாள் அவள்.

அது உண்மையும் கூட வேவு பார்த்தல், ஒட்டுக் கேட்டல், கோள் மூட்டல் போன்ற சின்னத் தனங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள் குருபாதம் மீனாட்சி தம்பதியர்.

மயூரி, அவளாகத்தான் தன் நட்பினரை விட்டாளே தவிர, அவளுடைய புகுந்த வீட்டினர் யாரும் இவர்கள் பற்றி ஒரு சொல் சொன்னதில்லை. முகபாவனையால் கூட ஆட்சேபித்ததும் இல்லை.



தோன்றினாலும்

மைகளும் உண்டு
எவே கோவிந்தனை
சங்கடப்படவில்லை.

ர்ந்து இன்றும் அவள்
பில்லைதானே? உடல்
கறை காரணமாகவே,

மீறிச் செல்ல தொடு நியாயமும் ஆகாது.

எனவே எல்ஐசி கோவ னை வீட்டுக்கு அழைப்பதே மேல் என்று மயூரி கருதினாள்.

குறித்த நேரத்தில் அவரும் வந்துவிட மயூரி அவரை அவளுடைய மாமனாருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

தந்தை இறந்த போது அவர் செய்த உதவியைப் புகழ்ந்து கூறி விட்டு ''அப்பாவைப் பற்றித் தெரிந்தவர்களிடம் பேச வேண்டும் போல இருந்தது. அதனால்தான் வரச் சொன்னேன்'' என்றாள்.

பரிவுடன் நோக்கி, ''இந்த நேரத்தில் அதுபோல ஆசைகள் வருவது இயற்கைதான். பேசிக் கொண்டிரு'' என்று குருபாதம் எழுந்து விட்டார். ''பையன் டெல்லியிலிருந்து வந்தபின், தொழில் ரீதியாக நாம் கொஞ்சம் பேசலாம்'' என்று கோவிந்தனிடம் கூறிவிட்டு, அங்கிருந்து சென்றும் விட்டார்.

அவர் முன்னே வைக்கப்பட்டிருந்த பழச்சாறைக் கொஞ்சம் பருகி விட்டு ''இங்கே பிரச்சினை இராது என்று நீ சொன்னதன்

பொருள் இப்போது விளங்குகிறது. பார்க்க முடிந்திருந்தால், உன் தந்தை எவ்வளவோ மகிழ்ச்சி அடைந்திருப்பார்'' என்றார் கோவிந்தன்.

''ஆமாம் அங்கிள்'' என்று அவளும் மனதார ஒப்பவும் அவர் ''சொல்லம்மா, என்ன விஷயமாக என்னை வரச் சொன்னாய்?'' என்று விசாரித்தார்.

''மாமாவிடம் சொன்னதுதான் அங்கிள்?'' என்றாள் அவள். ''அப்பாவோடு உங்கள் பழக்கம் எப்படி? எப்படிப் பாலிசி எடுத்தார்? கடைசி நாளில்.... நீங்கள் பார்த்த கடைசி நாளில் அவர் எப்படி இருந்தார்? அதெல்லாம்தான். தெரிந்து கொள்ள ஆசையாக இருக்கிறது!'' என்றாள் தொடர்ந்து.

சற்று ஐயத்துடன் பார்த்தவரின் முகத்தில் பரிதாபம் தோன்றியது.

சிறு அமைதியின் பின் அவர் பேசத் தொடங்கினார்.

சுயம்புலிங்கத்தோடு, கோவிந்தனுக்கு சுமார் மூன்று ஆண்டுகளாகப் பழக்கம். எப்படியாவது ஒரு பாலிசி எடுக்க வைத்துவிட வேண்டும் என்று சுயம்புலிங்கத்திடம், கோவிந்தன் எவ்வளவோ முயன்று பார்த்தார். ஆனால் அழகாகப் பேசி மயூரியுடைய தந்தை மறுத்து விட்டார்.

கடைசியாக இந்த முறை திருப்பதியில் வைத்துத்தான் அவர் மனம் மாறியது. என்னவோ முடிவு வரப் போவதை அந்தக் கடவுளே அவருக்கு உணர்த்தி பாலிசி எடுக்க வைத்ததுபோல அவராகக் கோவிந்தனைக் கூப்பிடச் செய்தாராம்.



என்பதெல்...
வந்தி...
...ராம் ஜிஜி
181

...தான் போவதாக
...ஏதாவது செய்து
...ஒரு வகையில்
...லாம் எப்படித்

...இதற்கு இந்தக்
...லாம்.

...தைப் பார்த்துவிட்டு
...ஷ்டம்தான். அதிலும்
...எப் பற்றி நினைத்தாலே,
துன்பம்தான். ...ஷமாக, சிரித்துச் சிரித்துப்
பேசிவிட்டு, அதை ந... ...வருந்தும்படி செய்து
விடுகிறார்கள். ஆனால் நீதான் கேட்டாய் என்றால்
யோசனையின்றி, நானும் சொன்னேனே!" என்று
தன்னைத்தானே கடிந்து கொண்டார் கோவிந்தன்.

மயூரியுள் எதுவே கிணுகிணுத்தது.

'இருக்கும் வரை சிரித்துப் பேசிவிட்டு..'

தந்தை சுயம்புலிங்கம் நடிக்கத் தெரிந்தவர்தான். ஆனால் அப்போது கூடவா நடித்திருப்பார்? எப்படி முடியும்?

இவரை நம்ப வைப்பதற்காக நடித்திருப்பாரோ?

சட்டெனச் சமாளித்து, "இல்லை அங்கிள். நீங்கள் சொன்னதுபோல் அப்பா அம்மாவை நினைக்கும் போது வருத்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் அங்கிள் என் பெற்றோரின் கடைசி நாட்களின் போது நான் அவர்கள் அருகில் இருக்கவில்லை. அப்போது அவர்கள் எப்படி

இருந்தார்கள், என்ன என்ன செய்தார்கள் என்று அறிந்து கொள்ள எனக்கு மிகுந்த ஆசை. உள்ளுணர்வு என்கிறார்களே. அங்கிள் அதைப் போல நேர இருந்த விபத்தைப் பற்றி அவர்கள் இருவருக்கும் ஏதாவது தோன்றி.. அவர்கள் அப்படி எதற்காவது வருந்திய மாதிரி... எதற்கேனும் கவலைப் பட்டதுபோல, உங்களுக்குத் தோன்றியதா?" என்று கேட்டாள் அவள்.

உள்ளூரப் பயம்தான். அவள் சொல்வச் சொல்ல பெற்றோர் அப்படி இருந்ததாக அவருக்கே தோன்றி விடுமோ, என்று. பேய்க்கதைகளைப் போல, இந்த 'உள்ளுணர்வு'க் கதைகளும் மக்களை ஈர்க்கக் கூடியவை. அதைப் பற்றி பேசுவது பிறர் பேசும்போது கேட்பது இரண்டுமே எல்லோருக்கும் பிடிக்கும். அப்படிப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பாக கோவிந்தன் இதை எடுத்துக் கொண்டுவிடக் கூடாதே என்றும் அவளுக்கு அச்சம்தான்.

ஆனால்...

'சீசரின் மனைவி சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும்' எனறு ஓர் உவமை சொல்வதுண்டு.

தாய் தந்தையின் இறப்பு தற்கொலை அல்ல என்றால் அதைச் சந்தேகத்துக்கு இடமின்றி அறிந்தே ஆக வேண்டும் என்பதில் மயூரி பிடிவாதமாக இருந்தாள். எத்தனையோ ஒழுங்கு முறையற்ற அடிப்படைகளின் மீதுதான் அவளது திருமணம் நடந்திருந்தது. ஆனால், பெற்றவர்களின் மரணம் தற்கொலைதான் என்றால், அதன் காரணமானவனோடு வாழும் தவறும் நடக்கக் கூடாது. எனவே அந்த ஒரு விஷயம் அவளுக்கு ஐயம் திரிபறத் தெரிந்தாக வேண்டும். சந்தேகமே

என்பதெல்
வந்தி
காரம் இல்

லையென்றால்,
யே இருந்துவிட

தவிப்புமாக
ப் பார்த்தாள்.

நல்லவேளையாகக்
பள் அஞ்சிய வகை
வில்லை.

"ஊகூம். அந்த மாதி தெரியவில்லையேம்மா" என்றார் தெளிவாக. "சொல்லப் போனால் அன்று உன் தந்தை 'விட்' அடித்துப் பேசிய போது விழுந்து விழுந்து சிரித்ததில் உன் அம்மாவுக்கு அடி வயிற்றில் பிடிப்பே வந்து விட்டது. பிடித்துக் கொண்ட இடத்தில் தடவி விட்டபடி மெல்ல நிமிரச் சொல்லி அதன் பிறகுதான் பிடிப்பு விட்டது" என்று அவர் விவரிக்க மயூரியின் கண்களில் நீர் கோர்த்தது.

சுசீலா, எப்போதும் அப்படித்தான். கணவரின் முகம் பார்க்கும் கண்ணாடி மாதிரி. ஆனால், அவரது உணர்ச்சிகளைச் சற்று அதிகப் படியாக எதிரொலிப்பாள். சிரிப்பானாலும் அப்படித்தான். அழுதாலும் அதேவிதமே.

தாயார் பொங்கிச் சிரித்தது, மயூரிக்குப் பெருமளவு நம்பிக்கையூட்டியது. எனவே மேலும் விசாரித்தாள்.

"சொல்லுங்கள், அங்கிள் நீங்கள் மூவரும் வெகுநேரம் சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தீர்களா?"

"மூன்றல்ல மயூரி, நாலு பேர். அந்தத் தெலுங்குக்காரர்... அவர்தானம்மா பெரிய லாரி போக்குவரத்து நிறுவனத் தலைவர். ராமநாயுடு. அவரும் திருப்பதிக்கு வந்திருந்தார். எல்லோருமாகத்தான் பேசிக் கொண்டிருந்தோம். அவரோடு சுயம்புசார், தொழில் நடத்தப் போவதாக இருந்ததே. தொழில் கொஞ்சம் சூடு பிடித்ததும், வீடு கட்டக் கடன் கிடைக்கும்படி இன்னொரு பெரிய பாலிசி எடுக்கப் போவதாகவும் உன் அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். பெரிய வீடாக, உனக்குக் கட்டித் தர வேண்டுமாம். உனக்கு வாடகை வருமானம் கிடைக்கும்படியாகக் கடை கட்ட வேண்டும் என்றெல்லாம் ரொம்ப ஆசை அவருக்கு. பெரிய திட்டமெல்லாம் போட்டார்..."

அவளை மையமாக வைத்துத்தான், எல்லாத் திட்டமும் அவளது நல் வாழ்வுக்காக.

சட்டென ஏதோ தெளிவான மாதிரி இருந்தது அவளுக்கு.

தந்தையின் முயற்சிகள் திட்டங்கள் எல்லாமே எந்தவிதக் கவலையும் இல்லாமல் மகள் வளத்தோடு நன்றாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான். தன் சுகத்துக்காகப் பெற்றோரின் மரணத்தை ஆராய்கிறோமே என்று அவள் குற்ற உணர்ச்சி கொள்ளத் தேவையில்லை. அப்படி ஆராய்ந்து அறிந்து அவள் சுகமாக வாழ்வாளேயானால், அவருக்கு ஆறுதலாக இருக்கும். மகிழ்ச்சியாகவும்.

அம்மாவோ, அப்பாவின் முகம் பார்க்கும் கண்ணாடி.

கண்ணைத் துடைத்துக் கொண்டு "அந்த ராமநாயுடுவை நான் பார்க்க முடியுமா அங்கிள்?" என்று கம்மிய குரலில் மயூரி வினவினாள். "அவரிடமும் அப்பா பற்றிப் பேச வேண்டும்".

''உனக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது மயூரி. நாயுடு இப்போ சென்னையில்தான் இருக்கிறார். கல்யாணம் நிச்சயமான மகளுக்கு வைர செட் ஒன்று வாங்க வேண்டும் என்று இங்கே வந்திருக்கிறார். இன்றும் நாளையும் சென்னையில் இருப்பார். உனக்கு முழு மாசம் என்பதைச் சொல்லி அவரை இங்கேயே அழைத்து வரவா? வருவார் நல்ல மனிதர்.''

மறுநாள் வந்த ராமநாயுடுவும் அதே போலத்தான் சொன்னார்.

ராமநாயுடுவின் முக்கியத் தொழில் சரக்கு லாரி போக்குவரத்து. ஆந்திராவில் மட்டும் செய்து கொண்டிருந்ததை அருகாமை மாநிலங்களுக்கும் விரிவுபடுத்திக் கொண்டிருந்தார். தமிழ்நாட்டுக் கிளை, சுயம்புலிங்கத்தின் பொறுப்பில் நடப்பதாகவும், ஆளுக்குப் பாதி பாதி என்றும் பேசி முடித்திருக்கிறார்கள். மற்ற தொழில் வகைக் கணக்குகளை முடிப்பதற்காக, சுயம்புலிங்கத்துக்கு, பத்து லட்சத்துக்கு ஒரு 'செக்'கும் போட்டு மறுநாள் 'கூரிய'ரில் அனுப்புவதாக ஏற்பாடு. திருப்பதியில் எல்லாம் பேசி முடித்து. ஞாயிற்றுக்கிழமை என்பதால் இந்த ஏற்பாடு. ஆனால்.. மறுநாளைக்கு எல்லாம் முடிந்து விடவே ராமநாயுடு அப்படியே விட்டுவிட்டார்.

''தொழிலில் கெட்டிக்காரர் அம்மா உன் தகப்பனார். உழைக்க அஞ்சாதவர். உற்சாகம் மிகுதி. வேறு என்ன வேண்டும்? இன்னமும் குறைந்தது இருபத்தைந்து ஆண்டுகள் நன்றாகச் சம்பாதிப்பார். ச்சு! எல்லாம் வீணாகிப் போயிற்று'' என்று வருத்தப்பட்டார்.

''ஆனால், ஒரு நிம்மதி. நீ நன்றாயிருக்கிறாய். அவருக்கு அதுதான் பெரிய கவலை.''

''கவலையா?'' தந்தை கவலைப்படும் அளவுக்கு அவள் ஒன்றும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கவில்லையே? சிட்டுக் குருவி போல சிரித்துக் கொண்டிருப்பதைத்தானே, அவர் பார்த்திருக்கிறார்.

மயூரி ஆச்சரியமாக நோக்கவும், ராமநாயுடு விளக்கினார். ''இருவர் குடும்பம், பிள்ளை குட்டிகளைப் பற்றிப் பேச்சு வந்ததும்மா. இருபது வயது மகள் என்றதும், மாப்பிள்ளை பார்க்கிறீர்களா என்று கேட்டு விட்டேன். தூக்கத்திலிருந்து விழித்த மாதிரி அவருக்கு ஒரு திகைப்பு. சொந்த வீடு, கட்டடம் என்று இருந்தால்தானே கல்யாண மார்க்கெட்டில் உனக்கு மதிப்பு இருக்கும்? இப்போது ஒன்றும் இல்லையே என்று கவலை. உடனேயே அதற்கான திட்டம் போடத் தொடங்கி விட்டார். அவர் திட்டமிட்டது நடக்கவில்லைதான். என்றாலும் நீ இப்படி ஒரு பெரிய இடத்து மருமகளாக இருப்பது அவரது ஆத்மாவுக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தரும் அல்லவா? பேரன் பேத்திகளுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பது வரை அன்றைக்கு அவர் யோசித்தார்.''

பேரன் பேத்தி வரை.

வயிற்றைக் குனிந்து பார்த்த மயூரியின் மனதுள் பூ விரிந்து, விரிந்து மணம் பரப்பலாயிற்று.

பேரன் பேத்தி வரை சிந்தித்தார் என்றால் அவளுடைய தந்தை, வாழ்வைப் பற்றி ஆசையோடு சிந்தித்திருக்கிறார். எதிர்காலத்தைப் பற்றி மிகுந்த நம்பிக்கையோடு இருந்திருக்கிறார் என்றுதானே அர்த்தம்?

அதாவது வாழ வழியில்லை என்று அவர் நிராசையில் வாழ்வை முடித்துக் கொள்ளவில்லை. ஏற்கவில்லை. அவர்கள் சாவுக்கு அவள் கணவன் காரணம் இல்லை.

நெஞ்சை அழுத்திக் கொண்டிருந்த பெரும் சுமை இறங்கி விட மயூரி காற்றில் பறப்பது போல உணர்ந்தாள். தன் மகிழ்ச்சியைக் காணப் பெற்றோர் இல்லையே என்று கூடத் தோன்றியது.

அவளுக்குத் தேவைப்பட்ட பேச்சு முடிந்துவிட, அவள் சென்று மாமனாரை அழைத்துவர, அவர்கள் மூவருமாகச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

ராமநாயுடுவின் லாரிகளைப் பயன்படுத்திக் கொள்வது பற்றியும், திட்ட அளவில் இருக்கும் காகித ஆலைக்கு ஆயுள் காப்பீட்டுக் கழக மூலம், குறைந்த வட்டியில் கடனுதவி பெறுவது பற்றியும், மூவருமாகப் பேசினர்.

மூவருக்குமே லாபம் கிடைக்கும் வகையில்.

தொழிலை முழுமையாக மகனிடம் ஒப்படைத்து விட்டு, ஒதுங்கி விட்டதாகக் குருபாதத்தைப் பற்றிக் கூறுவது அவ்வளவாகச் சரியென்று இப்போது மயூரிக்குத் தோன்றவில்லை. என்ன சின்னச் சின்ன விஷயங்களில் எல்லாம் அவர் மூக்கை நுழையாதிருக்கலாம். ஆனால் அதற்காக ஒன்றுமே கவனியாமல் நிச்சயமாக இருக்கவில்லை.

பத்து லட்சத்துக்குத் தந்தையிடம் கணக்குச் சொல்ல வேண்டியிருக்கும் என்று மனுபரதன் சொன்னது, இப்போதும் அவளுக்கு நினைவு வந்தது. அந்தப் பணம் பற்றி மாமனார் ஒரு தரம் குறிப்பிட்டதும்.

மனுபரதன் மெய்தான் சொல்லியிருக்கிறான்.

எப்போது வருவான்?

அவளது மாற்றத்தை எப்படி ஏற்கப் போகிறான்?

அவனுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்பதில் அவளுக்குச் சந்தேகமே இல்லை.

ஆனால், தன் மனமாற்றத்தை அவனுக்கு எப்படி உணர்த்துவது என்றுதான் அவள் குழம்பிக் கொண்டிருந்தாள். இனிய குழப்பம்!

கோயம்புத்தூரிலிருந்து முன்னதாக வந்தது போல இப்போதும் வர மாட்டானா என்று அவள் ஆசைப்பட்டாள்.

ஆனால் அப்படி அவன் வந்தபோதோ எல்லாம் குளறுபடி ஆகிவிட்டது.

இந்த முறையும் மனுபரதன், திட்டமிட்டதை விட ஒருநாள் முன்னதாகத்தான் திரும்பி வந்தான்.

எதிலும் மூக்கை நுழைத்துக் குட்டை குழப்பும் அநாகரீகம், அந்த வீட்டில் யாருக்கும் இல்லை என்றாலும், அவள் முகத்திலிருந்த பிரகாசம், "என்னம்மா, குழப்பங்கள் எல்லாம் நல்ல விதமாய் முடிவுக்கு வந்தாகி விட்டது போலத் தோன்றுகிறதே!" என்று குருபாதத்தைக் கேட்க வைத்தது. கேள்வியாய் நோக்கவும் வைத்தது.

"ஆமாம் மாமா, எல்லாம் சரியாகி விட்டது" என்று முறுவலித்தாள் மருமகள்.

இப்போதும் திட்டமிட்டதை விட, ஒரு நாள் முன்னதாகவே மனுபரதன் திரும்புவதைக் கேலிப் பார்வையுடன் அவர்தான்

''முன்னெல்லாம் எங்கேனும் இப்படிப் போனால் மறைத்துப் பார்த்து விட்டு வருவதாகச் சொல்லி இரண்டு நாள் அதிகப்படியாகத் தங்கி விட்டு வருவான். இப்போது பாரேன்'' என்று மனைவியிடம் கூறியவர் மருமகளைப் பார்த்து சிரித்தார்.

பதிலுக்கு சந்தோஷமாகச் சிரித்தாள் மயூரி.

தடையற்று இப்படிச் சிரிக்க முடிவதே எவ்வளவு பெரிய சுகம்.

''ஆமாம், இப்போது மனைவி, அப்புறம் பிள்ளையும் வந்த பிறகு வெளியூர் போகிற வேலைக்கு வேறு ஆளைப் பாருங்கள் என்பான்'' என்று மீனாட்சி சொல்ல மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது.

''அதற்காக, இன்னொரு பிள்ளை, ஏன் பெற்று வளர்த்து வைக்கவில்லை என்று கூடக் கேட்கலாம்'' என்று குருபாதம் நகைத்தார்.

'ஸ்விட்ச்' போட்டதும் விளக்கெரிந்து ஒளி பரவுவது போல மயூரியின் முகம் தெளிவுறவும் வீட்டில் இருந்த சஞ்சலங்கள் எல்லாம் மறைந்து சந்தோஷம் பரவுகிற மாதிரித் தோன்றியது.

அவளுக்கும், மனுவுக்கும் நடந்த திருமணம் எல்லோரையுமே பாதித்திருக்கிறது. வெளியே காட்டிக் கொள்ளாமல் நடமாடியிருக்கிறார்கள்.

வீட்டில் எல்லாருமே மனுபரதனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்தாலும் மயூரி பரபரப்பும், படபடப்புமாகக் கணவனுக்காகக் காத்திருந்தாள்.

தெரிவிக்க வேண்டியவை பெரிய விஷயமல்லவா?

ஊர்ப் பயணத்தை ஒருநாள் முந்திப்போட்ட மாதிரி விமானப் பயணத்தையும் மனுபரதன் மாற்றியிருந்தான். வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் தெரிவித்திருந்தது இரவு விமானம். ஆனால் வேலையும் முடிந்து டிக்கெட்டும் கிடைக்கவே பத்து மணிநேரம் முன்னதாகக் கிளம்பி விட்டான்.

இரவுதான் வருவான் என்று நேரத்தைத் தள்ளிக் கொண்டிருந்த மயூரி திடுமென பின்காலைப் பதினோரு மணிக்குக் கணவனின் குரல் கீழே கேட்கவும், முதலில் மெய்யென்று நம்பவில்லை.

அவனையே நினைத்துக் கொண்டிருப்பதால், அவன் குரல் மாதிரிக் கேட்கிறது என்றுதான் எண்ணினாள். ஆனால் மகனை வரவேற்றுக் குருபாதத்தின் குரலும் கேட்கவே விழுந்தடித்துக் கொண்டு எழுந்து அவசரமாக ஓடி வந்தாள்.

வந்த வேகத்தில் கால் தடுமாறி இவள் சரிந்த இடம் மாடிப் படிகளின் தொடக்கம்.

அங்கே சரிந்தவள் கைப்பிடிப்புக்கு ஏதுமின்றி உருண்டு உருண்டு அடிப்படியை அடைந்த போது அடியோடு நினைவை இழந்து விட்டிருந்தாள்.

21

சத்தம் கேட்டுப் பதறி ஓடி வந்த மனுபரதனுக்கு மயூரி கிடந்த கோலத்தைக் கண்டு ரத்தம் உறைந்து போயிற்று.

ஒரு கணம் திகைத்தவன் ஓடிப் போய், நீர் எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்துப் பார்த்தான்.

கண்ணைத் திறக்காதபோதும், வலி தாளாத முனகல் ஒன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது.

விழுகிறோம் என்று உணர்ந்ததுமே வயிற்றுக் குழந்தைக்கு அடி பட்டு விடாமல் உடம்பைச் சுருட்டிக் கொண்டு உருண்டதில், அவளுக்கு கால் எலும்பு பிசகி விட்டிருந்தது.

கூடவே, குழந்தைப் பிறப்புக்காக, மருத்துவர் குறித்திருந்த நாளுக்கு இன்னும் பதினைந்து தினங்கள் இருந்தபோதும் மாடிப் படியில் உருண்ட அதிர்ச்சியில் மயூரிக்குப் பனிக்குடம் உடைந்து பிள்ளை வலியும் எடுத்து விட்டது.

மருத்துவர்கள் அவசர ஆலோசனையின் பின் அறுவை சிகிச்சை செய்து குழந்தையை வெளியே எடுத்தார்கள். தாய் தந்தை இருவரையும் கொண்டு பிறந்திருந்த பெண்ணரசி தன் அழுகைச் சத்தத்தால், மருத்துவமனையையே கிடுகிடுக்கச் செய்தாள்.

படிகளில் உருண்டதால் ஏற்பட்ட சிராய்ப்புகள் உள் காயங்கள் மூட்டுப் பிசகல் எல்லாம், குணமாகி மயூரி மகளோடு வீடு வந்து சேர கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆகிவிட்டது.

மருத்துவமனையில் மயூரியின் துணைக்கென்று ஒரு நர்ஸ் எப்போதும் கூடவே இருந்தாள். அத்தோடு மயூரியும் குழந்தையிடம் லயித்துப் போயிருந்தாள்.

ஆனால் வீடு வந்து சேர்ந்த பிறகும், மனுபரதன் அவளிடம் நின்று பேசாமல் காலை மாலையில் வெறும் நலம் விசாரிப்புடன் ஓடிக் கொண்டிருக்கவும் அவள் திகைத்தாள்.

ஏன்? என்ன ஆயிற்று?

கோவைக்குச் செல்லுமுன் ஓரளவு நன்றாகப் பேசிக் கொண்டிருந்தவன்தானே? இப்போது என்ன?

பெண் பிறந்ததால் கவலையாகி விட்டதா? அரங்கேற்றத் துக்குப் போய் வந்த பின் பேசிய பேச்சு உறுத்துகிறதோ? பிற்காலத்தை எண்ணி பயமா?

எந்தவிதத் துன்பமும் நேர விடாமல் எப்படி வளர்க்கப் போகிறான் என்றெல்லாம் பெரிதாக அளந்து விட்டு அப்படி என்ன பயம்?

அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

பால்சதையுடன் பூப் போன்ற மகளைப் பார்க்கையில் மயூரிக்கு எல்லாமே சிரிப்பாகத்தான் இருந்தது. இந்த சுகத்தைக் கணவனும் அனுபவிக்க வேண்டும் என்று ஆசையாகவும் இருந்தது..

அன்று மாலையில் நலம் விசாரித்து விட்டு ஓட இருந்த மனுபதரனை நிறுத்திப் பேசினாள். ''என்ன உங்களைக் கண்ணிலேயே காணோமே'' என்றாள் சிறு கேலியாக.

''ஏன்? தினமும் இரண்டு வேளை, உன்னை வந்து பார்த்து விட்டுத்தானே போகிறேன்?'' என்று எங்கோ பார்த்தபடி பதிலுரைத்தான் அவன்.

''பார்த்து விட்டு, உடனே போய் விடுகிறீர்களே, என்றுதான் நானும் சொன்னேன்.''

அவனது வார்த்தைகளையே பயன்படுத்தி அவள் பேசிய விதத்தை அவன் கவனித்தது போலவே தோன்றவில்லை. ஊகும். என்னவோ விஷயம் இருக்கிறது.

யோசனையோடு ''உங்களோடு சற்று பேச வேண்டும்'' என்றாள் அவள்.

சட்டென இறுகி ''கவலைப்படாதே. நான் எந்த விதத் தடையும் செய்யப் போவதில்லை'' என்றான் மனுபரதன்.

''என்ன தடை?'' என்று புரியாமல் கேட்டாள் மயூரி. அவன் பதில் கூறுமுன் அவளே தொடர்ந்து ''அது என்னவாக இருந்தாலும் உட்கார்ந்து கொண்டு சொல்லுங்களேன். நின்று கொண்டே இருப்பானேன்?'' என்று கட்டிலில் ஒதுங்கி உட்கார்ந்தாள்.

அவள் அருகே அமராமல் பக்கத்தில் கிடந்த நாற்காலி ஒன்றில் அவன் உட்கார்ந்த போதும், அவள் அதைப் பெரிதாக எண்ணவில்லை. அவர்களது விசித்திரமான உறவில் அருகருகே நெருங்கி அமர்வது எல்லாம் பழக்கமில்லை தானே?

''நீ பிரிந்து செல்வதை நான் தடுக்கப் போவதில்லை என்று சொன்னேன். மணவிலக்குக்கு வேண்டிய ஏற்பாட்டை நானே செய்து தருகிறேன்'' என்று மரத்த குரலில் அவன் கூறவும் மயூரி திகைத்தாள்.

மண விடுதலையா? என்ன இது?

எவ்வளவோ திகைப்புதான் மயூரிக்கு! ஆனாலும், அவனது அன்பை அறிந்து விட்டிருந்ததால், அவளுக்கு பயம் வரவில்லை!

''நான் உங்களிடம் மண விடுதலை கேட்கவில்லையே?'' என்றாள் திகைப்புடன்.

''வாயால் கேட்டால்தானா? செய்கை புரியாத முட்டாளா நான்?''

''உங்கள் பேச்சு, எனக்குப் புரியவில்லை. இப்போது எதற்காக இந்த ஏற்பாடு?''

''நீ உயிரோடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்'' என்றுரைத்த இப்போதும், அவன் குரலில் உள்ளடக்கிய ஆத்திரமே தொனித்தது.

''உயிரோடு...? சரி. சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்வது எனக்குப் பிடிக்காததுதான். ஆனால் இப்போது நீங்கள் சொல்வது எனக்குக் கொஞ்சமும் புரியவே இல்லையே'' என்று மயூரி மீண்டும் குழம்பினாள்.

''என்ன புரியவில்லை? நீ வேண்டும் என்றுதானே... எப்படியாவது செத்து விட வேண்டும் என்றுதானே மாடிப்படியில் விழுந்தாய்?'' என்று கோபமும் வருத்தமுமாகக் கேட்டான் மனுபரதன்.

சாவா? அவளா? புரியாமல் அவனையே மயூரி மீண்டும் கேட்டாள், ''நான் எதற்காகச் சாக வேண்டும்?''

''சாவில்தான் நிம்மதி என்று நீதான் முன்பே சொல்லியிருக்கிறாயே? நிறை கர்ப்பத்தோடு படிகளில் உருண்டு விழுந்து நீ அதைத்தான் நிறைவேற்றிக் கொள்ள முயன்றாய். அப்படித்தானே? என்ன பைத்தியக்காரத்தனம். இவ்வளவு தீவிரமாக இருக்கிறாய் என்று தெரிந்தால்.. முன்பே..''

அவன் பேச முடியாமல் திணறுவதையும் அவனது கை முஷ்டி இறுகியிருப்பதையும் கவனித்த மயூரியின் கண்கள் வியப்பினால் விரிந்தன. இவ்வளவு வருத்தப்படுகிறானே!

படுவான்தான்! கை புண்ணாக விசிறியவன் ஆயிற்றே?

கை நீட்டி, அவன் கையைப் பற்றி விரல்களை மெல்ல விரித்து விட்டபடி, ''அப்படியெல்லாம் இல்லை மனு. உங்கள் சத்தம் கேட்டதும் வேகமாக ஓடி வந்தேனா, கால் தடுமாறி விட்டது'' என்றாள் இதமான குரலில்.

''பொய்'' என்றான் அவன். அவளை நம்ப மாட்டாமல், ''நன்றாக நாட்டியம் ஆடப் பயின்றவள், சற்றுத் தடுமாறினால் கூட சமாளித்துக் கொள்ளவும் பயின்றிருப்பாய்தானே? சமாளித்திருக்க முடியாதா, என்ன?''

''பயின்றிருக்கி... றேன்... ஆனால்...'' என்று இழுத்த மயூரியின் கண்கள் பளிச்சிட்டன. ''ஆனால், வயிற்றில் நிறைமாதப் பிள்ளையோடு நடனம் பயின்றது இல்லையே..'' என்று கண் சிமிட்டியவள் விவரம் சொன்னாள். ''கால் தடுமாறி விழப் போகிறேன் என்று புரிந்ததும், குழந்தைக்கு அடிபட்டு விடுமோ என்று பயந்து விட்டேன்! அதைக் காப்பாற்று வதற்காக, உடம்பைச் சுருட்டிக் கொண்டேனா? எதையும் பிடிக்க முடியவில்லை! முழுப்படியும் உருளும்படி ஆகி விட்டது! எப்படியோ குட்டிப் பாப்பா தப்பித்தாள்''

பிரமிப்புடன் மனைவியை பார்த்தான் மனுபரதன். இந்தக் குழந்தையை அழிப்பதற்கு மயூரி பட்ட பாடென்ன? இப்போது அதைக் காப்பாற்ற உயிரைத் தரவும் துணிந்து விட்டாளே! இதன்பொருள்...

விரல்களைப் பிரித்து விட்டுக் கொண்டிருந்த கைகளை இறுகப் பற்றி ''மெய்யாகத்தான் கூறுகிறாயா?'' என்று மனைவியின் முகத்தைக் கூர்ந்தபடி வியப்புடன் கேட்டான் மனுபரதன்.

''இம்.''

''எப்படி?'' இன்னமும் அவனுக்குப் பிரமிப்புதான்.

''இது கூடத் தெரியாமலா எத்தனையோ பேரைக் கட்டி மேய்த்துத் தொழிலெல்லாம் நடத்துகிறீர்கள்?''

பற்றிய கைகளை விடாமலே எழுந்து, அவள் அருகில் வந்து அமர்ந்து ''புரிவதை நம்புவதுதான் கடினமாக இருக்கிறது. உன்னைப் பொறுத்தவரையில் நான் அயோக்கியன். தகப்பன் கழுத்தில் கத்தியை வைத்து...'' என்றவனின் பேச்சை மயூரி இடைமறித்தாள்.

''அதற்குத்தான் மனம் வருந்தி மன்னிப்பும் கேட்டு விட்டீர்களே!''

அவன் விடாமல் தொடர்ந்தான். ''உன் பெற்றோர் உயிர் விடக் காரணமானவன்.''

''இல்லை'' என்றாள் அவள் உறுதியான குரலில்.

''அதெப்படி உனக்கு நிச்சயம்?''

''நிச்சயமேதான். அப்பாவும் அம்மாவும் திருப்பதியில் இருந்த அந்தக் கடைசி நாளில் அவர்களோடு கூட இருந்த ஏஜண்ட் கோவிந்தன் அங்கிள் அப்பா கூட்டு சேர்ந்துதொழில்

நடத்துவதாக இருந்த ராமநாயுடு இருவருமே அன்று அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடும் இருந்தார்கள் என்பதை எனக்குத் தெளிவாகச் சொன்னார்கள்'' என்று தொழில், பேரன், பேத்தி பற்றியெல்லாம் அவர்கள் இருவரும் கூறியதைக் கணவனிடம் தெரிவித்தாள் மயூரி.

அவளது கை விரல்களைப் பற்றி மெல்ல வருடிக் கொடுத்தவனிடம் சற்று நேரம் அசைவே இல்லை. விழி உயர்த்தி அவன் அவளைப் பார்க்கவுமில்லை.

இன்னும் என்ன என்று மயூரி யோசித்தபோது மனுபரதன் ஒருவாறு பேசினான். ''அந்த இருவரும் விவரம் தெரிவித்திராவிட்டால் இந்த அன்பு தோன்றியிரா தல்லவா?''என்று எந்தவித உணர்ச்சியையும் காட்டாத குரலில் கேட்டான்.

பெரிய தப்பை அலட்சியமாக நடத்தி விட்டான். தப்பை உணர்ந்து விட்ட போதும், செய்த தப்பின் விளைவாக அன்பை எதிர்பார்க்கும் தைரியம், அவனுக்கு இல்லை.

எனவே அவன் தோளில் லேசாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டு ''பாருங்கள் மனு, அவர்கள் இருவரும் என்ன வேலை வெட்டி இல்லாதவர்களா? அத்தோடு என்னைப் பற்றித்தான் அவர்களுக்கு என்ன தெரியும்? அவர்கள் இருவரும் தானாகவா என்னைத் தேடி வந்து இந்த விவரம் எல்லாம்சொல்லி விட்டுப் போவார்கள்? முதலில் அந்த கோவிந்தன் அங்கிளை நான் எப்படித் தேடிக் கண்டு பிடித்தேன்

தெரியுமா?'' என்று அந்த விவரம் எல்லாம் தெரிவித்தாள் மயூரி.

கை தானாக மனைவியின் தோளை வருட அவன் கேட்டான். ''இன்னமும் 'ஏன்' என்று புரியவில்லையே? இது தெரிந்து கொள்ள முடியாதா என்று கேட்காதே. திடீர் என்று என்ன வேகம்? அதுதான் புரியாத விஷயம்.''

உதட்டைக் கடித்து ஒரு கணம் பேசாதிருந்தாள். அவள் சொல்லித்தான் ஆக வேண்டும். ஏகப்பட்ட குழப்பங்கள். வருத்தப்படுத்துமோ என்று எதையும் மறைப்பது கூடாது.

''நீங்கள் கோவை சென்ற போது சரியாகக் காரணம் சொல்லாமல் இரண்டு நாள் என்று மட்டும் சொல்லிப் போனீர்களே... அது என்னென்னவோ நினைக்க வைத்து விட்டது. ஏன் என்று கொஞ்சம் யோசித்ததில் என் மனம் புரிந்து போயிற்று'' என்று மறையாது ஒப்பித்தவளுக்குக் கன்னம் சிவந்தது.

அவளைத் தோளோடு சேர்த்து அழுத்தமாய் ஒரு தரம் ஆதரவாய் அணைத்து விட்டு ''பண வசூல் என்பதை உன்னிடம் சொல்ல மனம் வரவில்லை மயூம்மா'' என்றான் மனுபரதன். ''ஏற்கனவே உன்னிடம் வசூலிப்பதாக எவ்வளவோ துன்பத்துக்கு ஆளாக்கி விட்டேன். அந்த வார்த்தையைச் சொல்லி பழசெல்லாம் நினைவில் வந்து நீ இன்னமும் வருந்த வேண்டாம் என்றுதான் வெறுமனே 'வேலை' என்று மட்டும் சொன்னேன். ஆனால் அதனாலும்

வருந்தி யிருக்கிறாய். விஷயம் உனக்குத் தெரிந்து அதற்காகவும் தவித்திருக்கிறாய்.''

கணவன் முகத்தில் வாட்டம் கண்டு ''அதனால் என்ன? கடைசியாக நன்மைதானே விளைந்திருக்கிறது'' என்றாள் தேறுதலாக.

உள்ளூர மனுபரதனின் கையணைப்பில் அவன் மீது சாய்ந்து இப்படி அமர்ந்திருப்பது எவ்வளவு இயல்பாக இருக்கிறது என்று எண்ணம் ஓட மயூரிக்கு ஆச்சரியமாக இருந்தது.

சுகமாகவும் இருக்கிறதே!

நிம்மதிப் பெருமூச்சு ஒன்று தன்னையறியாமல் வெளிவந்தது.

அவனும் அதைப் போலவே உணர்ந்தாற்போல் பெருமூச்சு விட இருவருக்கும் சிரிப்பு வந்து விட்டது.

''மஞ்சள் கயிறு மாஜிக்'' என்பது இதுதான் போலும். என்னென்னவோ நடந்து எப்படியோ இணைந்த போதும், இனி நம்மைப் போல ஒத்த தம்பதி வேறு யாரும் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்'' என்று அவள் கையைப் பற்றி முத்தமிட்டான் மனுபரதன்.

''அத்தை மாமாவை விட்டு விட்டீர்களே'' என்று அவள் கேட்டதும், ''நம் செட்டில் சொன்னேன் மய்யூ'' என்று அவன் சமாளிக்க இருவரும் நகைத்தனர்.

''விதிதான் நம்மை இணைத்தது என்று சொல்ல வேண்டும். குழந்தையைத் தந்தது மட்டும் இல்லாமல் நான் இருந்த இடத்துக்கே உங்களைப் பெண் பார்க்க வரவழைத்து வயிற்றுப் பிள்ளையோடு என்னைப் பார்க்கவும் வைத்ததே. பிள்ளைக்காக மணந்து கொண்டாலும்...''

''பிள்ளைக்காக மட்டும் என்று சொல்ல முடியாது மயூரி. முதலில் இருந்தே உன்னிடம் ஓர் ஈர்ப்பு இருந்தது. அதனாலேயே உன் பெற்றோர் விஷயம் அறிந்து ஓடி வந்தேன். நீ விரட்டிய பிறகும் பல முறை வந்தேன். நீ அவ்வளவு வெறுப்பைக் காட்டியதால், கொஞ்ச நாள் ஒதுங்கியிருக்க முடிவு செய்தேன். ஆனால் அப்போதெல்லாம் உனக்கு உதவி செய்ய வேண்டும் என்று உந்துதல் தவிர அதற்கு மேல் பெரிதாக நான் நினைக்கவில்லைதான். ஆனால் உன்னை மறக்க முடியவில்லை. பெண் பார்க்க வந்தது, அம்மாவின் பிடிவாதம், பெண் பிடிக்கவில்லை என்று சொல்லும் முடிவோடுதான் வந்தேன். அங்கே நீ கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்கினாய் பார். அந்த நிமிஷத்தில்தான் முடிவு செய்தேன்.''

சொல்லிக் கொண்டே போனவனின் அணைப்பு சட்டென மிகவும் இறுகிப் போயிற்று.

''அந்த மாதிரி நிலையில் உன்னை விட என்னால் எப்படி முடியும்? நீ என்னை எவ்வளவு வெறுக்கிறாய் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அந்த நிலையில் உன்னை விட்டுப் போக முடியாது என்பதும் எனக்கு மிகவும் நிச்சயம். பிள்ளையைக் காரணம் காட்டினேன். பிள்ளையையும்

விட்டிருக்க மாட்டேன்தான். ஆனால் திருமணத்தின் முக்கிய காரணம் நீதான் மயூரி."

தலையை லேசாக உயர்த்தி அவன் முகத்தைப் பார்த்தாள் மயூரி.

புயலுக்குப் பின்னே அமைதியும் இருளுக்குப் பின் ஒளியும் வருவதுதானே இயற்கை? அவர்கள் வாழ்விலும் அதே நியதிதான் நேர்ந்திருக்கிறது.

புன்னகையோடு கணவன் தோளில் மீண்டும் சுகமாகச் சாய்ந்து கொண்டாள் அவள்.

★ ★ ★